# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 08.11. 2021 | **1)** தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 49 சக்தி விநாயகர் நியு சால்ட் காலனி மீளவிட்டான் சர்வே எண். 799 பாகம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்கா அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் திருமதி. ஜெ. அனிதா மற்றும் திரு. க. ரமேஷ் என்பவர்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட காலிமனை வரியினை ரத்து செய்ய கோரி செயற் பொறியாளர் (திட்டம்) அவர்களால் ந.க.எண். எப்1/1985/20/எப்1 ன் படி வருவாய் பிரிவிற்கு வழங்கிய குறிப்பின் அடிப்படையில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் உத்தரவு பெற்று கணினி பதிவில் தொடர் கேட்புகள் ஏற்படாதவாறு ரத்து செய்யப்பட்டுள்ளது.<br>மேற்படி ரத்து செய்யப்பட்ட காலிமனை வரி 2021–2022 முதல் மற்றும் இரண்டாவது அரையாண்டு திருமதி. ஜெ. அனிதா என்பவர் பெயரில் வரிவிதிப்பு எண் 138/049/02477 ல் உள்ள கேட்பு தொகை ரூ. 4,170/– மற்றும் திரு. க. ரமேஷ் என்பவர் பெயரில் வரிவிதிப்பு எண். 138/049/02476ல் உள்ள கேட்பு தொகை ரூ. 4,170/– ஆகியவற்றை கணிணி பதிவிலிருந்து முழுமையாக நீக்கம் செய்யும் பொருட்டு ( Write off) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம். ந.க.எண்.அ2/1649/2020 | **98)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **2)**இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொதுநிதிதிட்ட பணியில் தூத்துக்குடிமாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட முத்தம்மாள்காலனி 3வது தெரு மேற்கு பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.46,75,000/–மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 21.10.2021அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை 21.10.2021அன்றுதிறக்கப்பட்டது.<br><br>1. M/s.S.M.Thomaiyar& Sonsஒப்பந்ததாரர்<br>2. M/s.P.Jefferson Samuelraj& Sonsஒப்பந்ததாரர்<br><br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண் 353நாள்25.10.2021 ல் தொழில்நுட்ப<br><br>கமிட்டியால் கீழ்கானும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதாக விலைப்புள்ளி உறை தேர்வுசெய்யப்பட்டது. | 99) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1. M/s.S.M.Thomaiyar& Sonsஒப்பந்ததாரர்<br>2. M/s.P.JeffersonSamuelraj& Sonsஒப்பந்ததாரர்<br><br>மேற்படிதொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு **27.10.2021**ஆம் தேதியன்று உறைதிறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யபட்டத்தில் கீழ்கண்டுள்ளவாறு விலைவிகிதம் அளித்திருந்தனர்<br>1. M/s.S.M.Thomaiyar& Sons,<br>மதிப்பீட்டைவிட **0.05**% குறைவு(ரூ.40,68,135.00)<br>2. M/s.P.JeffersonSamuelraj& Sons,<br>மதிப்பீட்டைவிட **4.93** % அதிகம் (ரூ.42,70,973.00)<br><br>M/s.S.M.Thomaiyar& Son ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 0.05% (ரூ.40,68,135.00 GST இல்லாமல்) குறைவாககொடுத்துள்ளதன் அடிப்படையில் M/s.S.M.Thomaiyar& Sons ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மதிப்பீட்டைவிட **0.05**% குறைவாக கொடுத்த M/s.S.M.Thomaiyar& Son, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>E2/03943/2021 | |
| | **3)** தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 53 வரதவிநாயகர் கோவில் தெருவில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் பள்ளியான ஏ.வி.எஸ். தொடக்கப்பள்ளிக்கு குடிநீர் இணைப்பிற்காகவும் குடிநீர் இணைப்பு வழங்கிய பின்பு புதிய குடிநீர் கட்டண வரிவிதிப்பு எண். நிர்ணயம் செய்வதற்கு சொத்து வரிவிதிப்பு எண் கட்டாயமாவதால் மேற்படி பள்ளி கட்டிடத்திற்கு தமிழ்நாடு அரசிதழ் எண். 33 நாள் 25.01.2018 பகுதி – 4 கோவை மாநகராட்சி திருத்தச் சட்டம் 1981 பிரிவு 123ன் படி அரசு உதவி பெறுவதால் மாநகராட்சி கணிணியில் Exepted Property முறையில் வரி நிர்ணயம் செய்து கதவு எண் வழங்கும் பொருட்டு சொத்து வரி வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>. க.எண்.அ2/0821/2021(தெ.ம) | **100)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **4)** இம்மாநகராட்சி பாளை ரோடு பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிக்க தனியார் அறக்கட்டளைகள் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ந.நி.(ம) குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 228 நாள் 13.11.2008ல் உரிய வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி இது போன்ற எரிவாயு | **101)** அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தகன மேடையினை மாமன்ற அனுமதி பெற்று தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகையினை தவிர்த்து ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.<br>மாமன்ற தீர்மான எண்கள். 219 நாள் 29/11/2012 மற்றும் 02/03/2016 தீர்மானங்களின் அடிப்படையில் சூர்யா டிரஸ்ட் நிறுவனத்திற்கு தகன மேடை பராமரிக்கும் பணிகளை ரூ. 1350/– பெற்றுக்கொண்டு பணிகள் மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் பராமரிப்பு பணிகளை சரியாக மேற்கொள்ளப்படவில்லை என தொடர்ந்து புகார்கள் வரப்பெற்றன. அதனை தொடர்ந்து 21.02.2020, 21.05.2020 , 09.07.2020 ஆகிய தேதிகளில் சூர்யா டிரஸ்ட் நிறுவனத்திற்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது.<br><br>ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் உத்தரவுப்படி 25.03.2021 அன்று ஆணையாளர் அவர்களின் நேரடி ஆய்வுக்கு பின்னர் சூர்யா டிரஸ்ட் நிறுவனத்தின் பராமரிப்பு பணிகளின் அனுமதி ரத்து செய்யப்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி மூலம் பராமரிப்பு பணிகள் நேரடியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>இம்மாநகராட்சி மூலமாக நேரடியாக பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் 25.03.2021 முதல் கொரோனா தொற்றால் தாக்கப்பட்டு இறந்தவர்கள் உட்பட அனைத்து சடலங்களுக்கும் எந்தவித கட்டணங்கள் இன்றி நவீன எரிவாயு தகனமேடை மூலமாக தகனம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்போது பாளை ரோடு தகனமேடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்து 2 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது.<br>1) செல்வராணி அம்புலன்ஸ் சர்வீஸ் , தூத்துக்குடி.<br>2) TEEED Foundation Madurai<br><br>3) இம்மாநகராட்சி நவீன எரியூட்டு தகன மேடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்து வரப்பெற்றுள்ள இரண்டு விண்ணப்பங்களில் TEEED Foundation Madurai<br>4) நிறுவனத்தினருக்கு நவீன எரியூட்டு தகன மேடை பராமரிப்பு தொடர்பான பணிகளை மேற்கொண்டதற்கு போதுமான அனுபவம் பெற்றுள்ளது தெரிய வருகிறது. எனவே இம்மாநகராட்சி நவீன எரியூட்டு தகன மேடை பராமரிப்பு பணிகளை கொரோனா (கோவிட் – 19) தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கிளின் சடலங்களை இலவசமாக தகனம் செய்ய வேண்டும் என தெரிவித்தும் நிபந்தனைகளின்படி சடலம் 1 க்கு ரூ. 2400/– வீதம் தகனம் செய்ய நிர்ணயிக்கப்பட்டு பராமரிப்பு பணிகளை மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள வேண்டும் என ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொள்ளவும் என தெரிவித்து TEEED Foundation Madurai | |

| | | |
|---|---|---|
| | நிறுவனத்தினருக்கு ஒப்படைப்பு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** TEEED Foundation Madurai நிறுவனத்தினருக்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அவ்வப்போது வகுக்கப்படும் சட்ட விதிமுறைகள் மற்றும் மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகளை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**இ2/03115–3/2021** | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் **08–11–2021**

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி